**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

************

## ஊடக அறிக்கை

## இந்தியாவின் 71 ஆவது குடியரசு தினம் மற்றும் இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினம் ஆகியவற்றை கொண்டாடிய இலங்கை – இந்திய சங்கம்

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி இந்தியாவின் 71 ஆவது குடியரசு தின மற்றும் இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் இலங்கை இந்திய சங்கத்தால் (SLIS) நடத்தப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக சர்வதேச ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த அவர்களும் கௌரவ விருந்தினராக இலங்கைக்கான பதில் இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் அவர்களும் கலந்துகொண்டிருந்தனர். இலங்கை இந்திய சங்கத்தின் தலைவர் திரு. ரொஹான் துடாவே , இராஜதந்திரிகள், தொழில்துறை சார் தலைவர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு உரை நிகழ்த்தியிருந்த கௌரவ சுசில் பிரேமஜயந்த, 19 ஆவது நூற்றாண்டிலிருந்து இலங்கை அரசியலமைப்பின் பரிணாம வளர்ச்சி குறித்து விளக்கமளித்திருந்தார். இலங்கை தலைவர்கள் அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த வெற்றிகரமான விஜயங்கள் குறித்து சுட்டிக்காட்டியிருந்த கௌரவ அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையில் மிகவும் ஆழமான பொருளாதார உறவினை கட்டி எழுப்புதல் மற்றும் பெருமளவான இந்திய முதலீடு ஆகியவற்றை இலங்கை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்திய அரசியலமைப்பின் தந்தை டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் 129 வது பிறந்த நாள் நினைவு தினத்தை 2020 ஆம் ஆண்டு குறிப்பிடுவதாக தனது உரையில் தெரிவித்த பதில் உயர் ஸ்தானிகர் ஜேக்கப், இந்திய அரசியலமைப்பில் இந்திய சுதந்திர போராட்டம் பெருமைக்குரிய இடத்தினை தனதாக்கிக்கொள்வதற்கு வழிகாட்டிய கொள்கைகள் மற்றும் பெறுமானங்களை எடுத்துரைத்தார். இலங்கை ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து அண்மையில் இலங்கைத் தலைவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட உயர் மட்ட விஜயங்கள் குறித்து அவர் விசேடமாக குறிப்பிட்டதுடன் , மேலும் இரு நாடுகளுக்கும் வலுவான ஆணைகளைக் கொண்ட தலைமைத்துவங்கள் காணப்படுவதன் விளைவாக இருதரப்பு உறவில் ஒரு புதிய உத்வேகம் காணப்படுவதாகவும் மேலும் சுட்டிக்காட்டினார். 2019 இல் நடந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உறவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 4.6 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகையுடன் சுற்றுலாத்துறைக்கான பாரிய தளமாக இந்தியா உள்ளது. ஆசியாவில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஒரு முக்கிய மேற்கோளாக மாறியுள்ள இந்தியாவின் சமீபத்திய வரவு செலவுத்திட்டம் மற்றும் பொருளாதார ஆய்வின் முக்கிய விடயங்களை பதில் உயர் ஸ்தானிகர் ஜேக்கப் மேலும் விவரித்திருந்தார். உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடான இந்தியா, 2024க்குள் 5 திரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடனான பொருளாதாரத்தினை எட்டும் பயணத்தினை

தொடர்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6 முதல் 6.5 வீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2006 முதல் 2016 வரையிலான தசாப்தத்தில் 271 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்சி பெற்றுள்ளனர். உலக வங்கியின் இலகு வர்த்தக தரவரிசையில் இந்தியா 2014ல் 142 ஆக இருந்த நிலையில் 79 இடங்களைக் கடந்து 2019ல் 63ஆம் இடத்தை எட்டியுள்ளது.

சீக்கிய மதத்தின் ஸ்தாபகர் குரு நாணக் தேவ் ஜி அவர்களின் 550ஆவது பிறந்த தின நினைவு நாளை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஸ்ரீ குரு நாணக் தர்பாரைச் சேர்ந்த திரு மன்வந்தர் சிங் அவர்கள் குரு நாணக் தேவ் ஜி அவர்களின் போதனைகள் மற்றும் வாழ்க்கை தொடர்பான ஒரு பிரசங்கத்தையும் நிகழ்த்தியிருந்தார்.

இலங்கை இந்திய சங்கத்தின் மைத்ரி சஞ்சிகையும் இங்கு வெளியிடப்பட்டது.

இலங்கையில் உள்ள மிகவும் பழமையானதும் பாரிய நட்புறவு சங்கமுமான இலங்கை இந்திய சங்கம் 1949 இல் இந்தியா மற்றும் இலங்கை சுதந்திரமடைந்த நிலையில் ஸ்தாபிக்கப்பட்டது.

* * * * *

கொழும்பு
03 மார்ச் 2020